**சிவகங்கை, தோட்டக்கலை துணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்:-**
**முன்னிலை: திரு.கு.அழகுமலை.,பி.எஸ்.ஸி(தோ.க)**

செ.மு.ஆணை எண் : பநி2/3221/2021 நாள் : 10.02.2022.

பொருள்: பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - 01.10.2019 அன்றைய நிலையிலான இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) பதவி உயர்வு பட்டியல் - திரு.நா.செல்வி, இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்றது - அன்னாரது இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்து ஆணையிடல்

பார்வை: 1 சென்னை-5, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். அஉப1/117368/18, நாள்:24.07.2020.

2 சென்னை-5, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். அநிபி5/13900/19, நாள்: 30.07.2020.

3. சென்னை-5, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். அபபி2/21864/19, நாள்: 12.08.2020.

*****

**ஆணை:-**

பார்வை (1)-ல் காணும் செயல்முறை ஆணையின்படி திருமதி.நா.செல்வி, அலுவலக உதவியாளர்-க்கு 01.10.2019 அன்றைய நிலையிலான இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) பதவிக்கு முறையான பதவி உயர்வு அங்கீகரிக்கப்பட்டு பார்வை (2)-ல் காணும் செயல்முறை ஆணையின்படி இவருக்கு ரூ.19500-62000 நிலை (8) என்ற ஊதிய நிலையில் இளநிலை உதவியாளராக பதவி உயர்வில் தோட்டக்கலை துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதை தொடர்ந்து பார்வை (3)-ல் கண்ட செயல்முறை ஆணையின்படி திருமதி.நா.செல்வி, இவ்வலுவலகத்தில் 14.08.2020 மு.ப. இளநிலை உதவியாளர் (பி.அ.)-ராக பணி ஏற்றுக்கொண்டார். எனவே, இவருக்கு 14.08.2020 மு.ப. முதல் இளநிலை உதவியாளர் (பி.அ.) பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேலும், இவர் தகுதிகாண் பருவத்தினை, பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில், இரண்டாண்டு காலத்திற்குள் நிறைவு செய்திட வேண்டும்.

II) இவர் உதவியாளர் பதவி உயர்வுக்கு கீழ்க்கண்ட துறை தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும்.

1. அரசு அலுவலக நடைமுறைதேர்வு (GOM)
2. கணக்கு தேர்வு - சார்நிலை அலுவலருக்குரியது - பாகம்-1.
3. தமிழ்நாடு அரசு வேளாண்மை துறை தேர்வு

தோட்டக்கலை துணை இயக்குநர்,
சிவகங்கை.

**பெறுநர்:**

திருமதி.நா.செல்வி, இளநிலை உதவியாளர் - இவ்வலுவலகம்.

10.2.22

நகல்: வேளாண்மை இணைஇயக்குநர், சிவகங்கை - தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை
- அவர்களின் தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: இருப்பு கோப்பு - பநி2 பிரிவு - இவ்வலுவலகம்.

உபரி-1.